செ.வெ.எண்.07/ஆகஸ்ட் நாள்.05.08.2019

# பத்திரிக்கை செய்தி

தருமபுரி மாவட்டத்தில் பாரத பிரதம மந்திரி கிசான் திட்டத்தின் கீழ் தகுதியான சிறு/குறு விவசாயிகள் மற்றும் பெரு விவசாயிகளுக்கு வருடத்திற்கு ரூ.6000/-ஐ நான்கு மாதத்திற்கு ஒருமுறை ரூ.2000/- வீதம் விவசாயிகளின் வங்கி கணக்குகளின் மூலம் பணம் பட்டுவாடா செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தில் இதுவரை விண்ணப்பிக்காமல் வெளியூர் சென்றுள்ள விவசாயிகளுக்கு விண்ணப்பம் செய்திட மீண்டும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி இத்திட்டத்தில் விடுபட்ட தகுதியான விவசாயிகளின் பெயர் பட்டியல் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் பார்வைக்காக ஒட்டி வைக்கப்பட்டுள்ளது. பெயர்பட்டியலில் உள்ள விவசாயிகள் தங்ளது நில விவரங்கள் (சிட்டா), ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி சேமிப்புக் கணக்கு புத்தகம் ஆகிய ஆவணங்களுடன் மேற்படி அலுவலகங்களில் விண்ணப்பம் செய்து பயன்பெறலாம்.

இதற்கு முன்னர் நடத்தப்பட்ட முகாம்களில் விண்ணப்பம் செய்தவர்கள் தற்போது மீண்டும் விண்ணப்பம் செய்யத் தேவையில்லை என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**